# அ.தி.மு.க. - பா.ஜ.க.வுக்கு டெபாசிட் கூட கிடைக்கக் கூடாது!

## சென்னை மண்டல பாக முகவர்கள் கூட்டத்தில் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை- அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் படித்தார்...

முதல் பக்கத் தொடர்ச்சி

* சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன்

* சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு

* சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு

* சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம்

* சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.இளையஅருணா

* காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன்

* காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர்

ஆகிய அனைவருக்கும் பாராட்டுகள்! வாழ்த்துகள்!

**கம்பீரத்தோடு இன்றிலிருந்தே பணியாற்றுங்கள்!**

வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களான நீங்கள்தான் உங்கள் வாக்குச்சாவடியில் இருக்கும் வாக்காளர்களுக்கும், நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்கும் முழுப் பொறுப்பு!

உங்களை நம்பித்தான் 'நாற்பதும் நமதே! நாடும் நமதே!' என்று கம்பீரமாக முழங்குகிறோம்! அதே கம்பீரத்தோடு இன்றில் இருந்தே நீங்களும் தேர்தல் பொறுப்பாளராகக் கடமையாற்ற வேண்டும்!

அதற்கு,

* வாக்காளர் பட்டியலைச் சரிபார்ப்பது,

* முறையான வாக்காளரை நம்மை நோக்கி ஈர்ப்பது,

* வாக்குப்பதிவு நாளில் வாக்காளர்களை வாக்குப்பதிவு மையங்களுக்கு வரவழைப்பது என உங்களுடைய கடமைகளைச் சரியாக - முறையாகச் செய்ய வேண்டும்!

உங்கள் வாக்குச்சாவடியில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராக நீங்கள் மாற வேண்டும். கழகத்துக்காக தினமும் ஒரு மணி நேரத்தை ஒதுக்க வேண்டும். அரசின் திட்டங்களையும் முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டும். உங்களிடம் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கும் புத்தகத்தைப் படித்துப் பார்த்தாலே, அரசின் திட்டங்கள் பற்றி உங்களுக்குத் தெரிந்துவிடும். அதை வைத்து, மக்களுக்கு உதவி செய்யுங்கள்.

வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களான நீங்கள் கொண்டு வரும் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்று அமைச்சர்களிடமும், மாவட்டக் கழகச் செயலாளர்களிடமும் சட்டமன்ற உறுப்பினர்களிடமும் உத்தரவாகவே நான் சொல்லியிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடும்பமும் பயனடையும் வகையில் பார்த்துப் பார்த்து திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். இதனால் மக்கள் நம் ஆட்சி மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம் என நமது திராவிட மாடல் அரசின் எல்லாத் திட்டங்களையும் நான் விளக்கமாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவையெல்லாம் உங்களுக்கே நன்றாகத் தெரியும்!

இதே மாதிரியான சாதனைகள் ஒன்றிய அளவிலும் நிகழ்த்தப்பட வேண்டும் என்றுதான் இந்தியா கூட்டணியை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

**தமிழ்நாட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு வஞ்சிக்கிறது!**

இந்தியா கூட்டணியின் வெற்றிக்காக நாம் செய்ய வேண்டிய கடமைகள் என்னவென்றால், நாம் செய்த - செய்கிற சாதனைகளை மட்டும் சொல்லாமல், பா.ஜ.க.வின் உண்மை முகத்தை வெளிப்படுத்த வேண்டும்!

தமிழ்நாட்டுக்காக எந்தச் சிறப்புத் திட்டத்தையும் கொண்டு வராமல் தமிழ்நாட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு வஞ்சிக்கிறது. பா.ஜ.க.வின் இந்தத் துரோகத்தையும் மக்கள் விரோத நடவடிக்கைகளையும் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

பா.ஜ.க.வின் கைப்பாவையாக அத்தனை துரோகத்துக்கும் சுயநலத்துடன் துணை நின்றது, அடிமை அ.தி.மு.க.! இன்றைக்குப் பிரிந்தது போல நாடகம் நடத்தும் இந்த கும்பலின் துரோகங்களைப் பட்டியல் போட்டு மக்களிடம் அம்பலப்படுத்த வேண்டும்!

தி.மு.க.வும் இந்தியா கூட்டணியும் பா.ஜ.க.வின் மக்கள் விரோதத் தன்மையை அம்பலப்படுத்துகிறது என்றுதான், எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறது பா.ஜ.க. அதனால்தான், வருமான வரித் துறை ரெய்டு எல்லாம் நடைபெறுகிறது.

ரெய்டுகள் மூலமாக அ.தி.மு.க.வை மிரட்டி, நீட்டிய இடங்களில் எல்லாம் கையெழுத்து வாங்கியதுபோல் நம்மையும் மிரட்டலாம் என்று பகல்கனவு காண்கிறார்கள். இந்த சலசலப்புகளுக்கும் - அச்சுறுத்தல்களுக்கும் - மிரட்டல்களுக்கும் பயப்படும் இயக்கமல்ல தி.மு.க.!

75 ஆண்டுகாலமாக இதையெல்லாம் எதிர்த்து நின்றுதான் நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம்; அந்த வெற்றி என்றைக்கும் தொடரும்! வருமான வரித் துறைக்கும், அமலாக்கத்துறைக்கும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் மட்டும்தான் கண்களுக்குத் தெரிகிறது.

**பா.ஜ.க.வின் அனைத்துத் துரோகங்களுக்கும் அ.தி.மு.க. உடந்தை!**

**பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சிகள் அமலாக்கத் துறை - வருமான வரித் துறை!**

**தி.மு.க.வின் வெற்றி மகத்தான வெற்றியாக இருக்க வேண்டும்!**

**எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங்கள் மட்டும் தெரிகிறது!**

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் வருமான வரித்துறையும், அமலாக்கத்துறையும் அவரவர் அலுவலகத்தை விட்டு வெளியேகூட வருவதில்லை.

ஆனால், இங்கு நம் தமிழ்நாட்டில், நம்முடைய இயக்கத்தினர் ஒவ்வொருவரையாகச் சோதனை செய்கிறார்கள். இப்போது அமைச்சர் சகோதரர் வேலு அவர்களைச் சோதனை செய்கிறார்கள். இப்படி, வருமான வரித்துறை, அமலாக்கத்துறையின் ரெய்டுகளில், வழக்குகளில் - Conviction Rate எவ்வளவு என்று பார்த்தால், அவர்கள் விசாரிக்கும் வழக்குகளில் ஒரு விழுக்காடு கூட இல்லை.

வெறும் அரசியல் பழிவாங்கலுக்கான பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சிகள்தான் வருமான வரித்துறையும், அமலாக்கத்துறையும்! அதனால்தான் வருகின்ற நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் மிக மிக முக்கியம் என்று சொல்கிறேன். இந்தத் தேர்தலில் நாம் பெறப்போகிற வெற்றி என்பது, மகத்தான வெற்றியாக இருக்க வேண்டும்.

கொள்கை என்று எதுவுமே இல்லாமல், ஊழல் மட்டுமே அச்சாணி என்று ஆட்சியில் இருந்து தமிழ்நாட்டை நாசப்படுத்திய அடிமை அ.தி.மு.க.வும் - தமிழ்நாட்டின் எல்லா உரிமைகளையும் பறித்து தமிழ்நாடு என்ற அடையாளத்தையே சிதைக்க நினைக்கும் பா.ஜ.க.வும் -சுயநலத்தின் காரணமாக இந்த இரு கட்சிகளுக்கும் துணை போகும் அதன் கூட்டணிக் கட்சிகளும் வெளிப்படையான கூட்டணியாக வந்தாலும் சரி மறைமுகக் கூட்டணியாக வந்தாலும் சரி, தமிழ்நாட்டில் எந்த தொகுதியிலும் அவர்களுக்கு டெபாசிட் கூட கிடைக்கக் கூடாது!

இது, கலைஞரின் உடன்பிறப்புகளான உங்கள் கையில்தான் இருக்கிறது. நாற்பதுக்கும் நாற்பது என்கிற வெற்றியை நாம் அடைந்தாக வேண்டும். கழக உடன்பிறப்புகளாக நம்முடைய இலக்கு இதுதான். அதற்கு இன்று முதல் உழைத்தாக வேண்டும்! இந்தியா கூட்டணி ஆட்சியைப் பிடித்தாக வேண்டும்! வளமிகு இந்தியாவை உருவாக்க வேண்டும்! அடுத்து வெற்றி விழா கூட்டத்தில் சந்திப்போம்! வாழ்க இந்தியா! வெல்க இந்தியா கூட்டணி!

இவ்வாறு முதல்வர் அவர்களின் உரையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் படித்தார்.

---

### சட்டீஸ்கரில் அமித்ஷா வெளியிட்ட தேர்தல் அறிக்கை!

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகையின் அப்பட்டமான காப்பி!

## 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, நவ.7 -

சட்டீஸ்கரில் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ள அமித்ஷா குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூபாய் 1000 உதவித்தொகை, என்று அறிவித்துள்ளது, திராவிட மாடல் அரசின் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையின் அப்பட்டமான காப்பி என்று 'தினகரன்' நாளேட்டின் 5.11.2023 தேதிய தலையங்கத்தில் ஏளனம் செய்துள்ளது.



தினகரன்
நவம்பர் 5, 2023 ஞாயிற்றுக்கிழமை
காலத்தின் கட்டாயம்
சட்டீஸ்கரில் சட்டமன்றத் தேர்தல் வரும் 7ம் தேதி மற்றும் 17ம் தேதி என்று இரண்டு கட்டங்களாக நடக்கிறது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் டிசம்பர் 3ம் தேதி எண்ணப்படுகிறது. தற்போதைய நிலவரப்படி சட்டீஸ்கரில் ஆளும் காங்கிரஸ் மற்றும் பாஜ இடையே பலத்த போட்டி நிலவுகிறது. இந்நிலையில், சட்டீஸ்கர் மாநிலத்திற்கான பாஜ..வின் தேர்தல் அறிக்கையை, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வெளியிட்டுள்ளார். பிரதமர் மோடியின் வாக்குறுதிகள் என்ற தலைப்பில், தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதில், ஒரு

இது குறித்து அத்தலையங்கம் வருமாறு:-

சட்டீஸ்கரில் சட்டமன்றத் தேர்தல் வரும் 7-ஆம் தேதி மற்றும் 17-ஆம் தேதி என்று இரண்டு கட்டங்களாக நடக்கிறது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் டிசம்பர் 3-ஆம் தேதி எண்ணப்படுகிறது.

தற்போதைய நிலவரப்படி சட்டீஸ்கரில் ஆளும் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. இடையே பலத்த போட்டி நிலவுகிறது. இந்நிலையில், சட்டீஸ்கர் மாநிலத்திற்கான பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கையை, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வெளியிட்டுள்ளார். பிரதமர் மோடியின் வாக்குறுதிகள் என்ற தலைப்பில், தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதில், ஒரு லட்சம் அரசு பணியிடங்கள் 2 ஆண்டுகளில் நிரப்பப்படும். சமையல் காஸ் சிலிண்டர் 500க்கு வழங்கப்படும். பெண் குழந்தைகள் பிறந்தால் 1.50 லட்சம் நிதிஉதவி வழங்கப்படும். நிலமற்ற விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 10 ஆயிரம் நிதிஉதவி வழங்கப்படும் என்று பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது.

இவை அனைத்திற்கும் மேலாக, குடும்பத் தலைவிகளுக்கு ஆண்டுக்கு 12 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பு பிரதானமாக இடம் பெற்றுள்ளது. அதாவது, மாதம்தோறும் 1000 என்ற ரீதியில் ஆண்டுக்கு 12 ஆயிரம் உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு நாம் கேட்டு பயன்பெற்றது போல் இருக்கிறதே என்று தமிழ்நாட்டு மக்களின் மனதில் எழும் கேள்வி இயல்பானது தான். ஆம், கடந்த செப்டம்பர் 15-ஆம் தேதி அண்ணா பிறந்த நாளையொட்டி, முதல்வர் தொடங்கி வைத்த கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என்னும் மாபெரும் வரலாற்று திட்டத்தின் அப்பட்டமான காப்பி தான் இது என்பதை, வெளிச்சம் போட்டு காட்டத்தேவையில்லை.

தமிழ்நாட்டில் 2021-ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில், திமுக சார்பில் மாபெரும் வாக்குறுதியாக இதனை அறிவித்தார் முதல்வர். அப்போது, இது சாத்தியமே இல்லாத ஒன்று. மக்களை ஏமாற்றுவதற்கான வாக்குறுதி என்று பகடிகளை உருட்டினார்கள் பா.ஜ.க. தலைவர்கள். இப்படிப்பட்ட நிலையில் தான், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில், தனது சீரிய முயற்சியால் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்பாட்டுக்கு கொண்டு வந்தார் முதல்வர்.

தற்போது மாதம்தோறும் 1000 என்ற வகையில், 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் மகளிர் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கிறது இந்த உரிமைத்தொகை. இந்தியாவில் இப்படிப்பட்ட திட்டத்தை செயல்பாட்டுக்கு கொண்டு வந்த முதல் மாநிலம் தமிழ்நாடு. இந்த பெருமையோடு தற்போது உலக அரங்கில் உயர்ந்து நிற்கிறது முதல்வரின் சிறப்பு.

இந்த திட்டத்தை தான், இப்போது பா.ஜ.க. காப்பியடித்து சட்டீஸ்கரில் தேர்தல் வாக்குறுதியாக வெளியிட்டுள்ளது. ஏழை, எளிய, விளிம்பு நிலை மக்களின் வாழ்வு மேம்பட இலவசங்களை அறிவித்து இன்னல் தீர்த்து வருகிறது திராவிட மாடல் அரசு. ஆனால், இலவசங்களை கொடுத்து மக்களை முடக்கிப்பே ாட்டுள்ளது திராவிட மாடல் என்றும் கொக்கரித்தனர் பா.ஜ.க. தலைவர்கள்.

அதே நேரத்தில், சில மாதங்களுக்கு முன்பு நடந்த கர்நாடக சட்டமன்றத் தேர்தலில், எப்போதும் இல்லாத வகையில் இலவச அறிவிப்புகளை வெளியிட்டது பா.ஜ.க. அந்த வகையில், இப்போது கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் சட்டீஸ்கரில் ரீமேக் செய்யப்பட்டுள்ளது. இப்படி திராவிட மாடல் அரசின் திட்டங்களை பின்பற்றும் பா.ஜ.க., நிச்சயம் அதன் சமூகநீதி சார்ந்த கொள்கைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.





புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவ அணி மற்றும் கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரி . சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் பெருங்களூரில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் மு.க.முத்துக்கருப்பன் ஏற்பாட்டிலும், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையிலும் ,மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் எஸ்.ஆர்.அண்ணாமலை முன்னிலையிலும், நடைபெற்ற மாபெரும் மருத்துவ முகாமை சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் எம்.எம். அப்துல்லா எம்பி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், அரு.வீரமணி, எஸ்.எல்.கருப்பையா, க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, மு.க. ராமகிருஷ்ணன் ஆர், ஆர். சாமிநாதன், சு.சண்முகம், வை.கோ.ராஜன், வி.என்.எம்.பாலமுருகன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, வே.ராஜேஸ், தபசு மணி முருகேசன், மு.கலைஞர் கருணாநிதி, டாக்டர் அமானுல்லா, டாக்டர் தவ.பா.உதயசூரியன், டாக்டர் மனோஜ்குமார், டாக்டர் பிரபாகர தாஸ் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

### குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - வரதராஜபுரத்தில்

# உள்ளாட்சி தினத்தையொட்டி கிராம சபைக் கூட்டம்!

## படப்பை ஆ.மனோகரன் குறைகளை கேட்டறிந்தார்!

காஞ்சிபுரம், நவ. 7-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - வரதராஜபுரத்தில் உள்ளாட்சி தினத்தையொட்டி நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் ஒன்றியச் செயலாளர் - மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் பங்கேற்று பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தார்.


காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வரதராஜபுரம் ஊராட்சியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் - குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன் அவர்கள் கலந்து கொண்டு பொது மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து சிறப்புரையாற்றினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முனைவர் மா. நன்னன்

### நவம்பர் 7 (2017)



தந்தை பெரியார், புரட்சிக் கவிஞர் பாவேந்தர், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பேராசிரியர் அன்பழகனார் ஆகியோரோடு நட்புக் கொண்டு, பகுத்தறிவுக் கொள்கைப் பாதையில் தொடர்ந்து பயணித்தவர்.

தொடக்கப்பள்ளி முதல் படிப்படியாக உழைப்பால் உயர்ந்து, கல்லூரிப் பேராசிரியர், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் எனப் பணியாற்றி பல பெருமைகளைப் பெற்றவர்.

திராவிட இயக்கம், சுயமரியாதை, தன்மானம், பகுத்தறிவு, தமிழ் மொழி ஆகியவற்றில் பற்றுக்கொண்டு வாழ்ந்தவர். இளைஞர்களுக்கு திராவிட இயக்க உணர்வுகளை ஊட்டி தமிழ்த் தொண்டு ஆற்றி வந்தவர். கழகத்தின் தொடக்க காலத்திலிருந்தே உறுப்பினராக இருந்தவர். கழக தலைமை இலக்கிய அணியில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது, கழக இளைஞர் அணி சார்பில் தமிழகம் முழுவதும் நடைபெற்ற ஒவ்வொரு "பயிற்சி பாசறை" வகுப்புகளில் பங்கேற்று சமூகநீதி, திராவிட இயக்கம், சுயமரியாதை பற்றி கழக இளைஞர் அணியினருக்கு விளக்கியவர்.

1991–ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருக்கரங்களால் "பெரியார் விருது" பெற்றவர். அத்துடன் இவரது தமிழ்ப் பணிக்காக "தமிழ்ச் செம்மல் விருது", "திரு.வி.க. விருது" ஆகிய விருதுகளை பெற்றவர்.

தம் வாழ்நாளில் பெரும் பகுதியை தமிழ்மொழி கற்பித்தல், வளர்த்தல், பிழை திருத்தல், செம்மைப் படுத்துதல் என்ற முறையில் பணியாற்றி, பகுத்தறிவு நெறி தழுவி வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**